பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1768)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 10 திங்கட்கிழமை 23-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 124

### ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபடும் அபாயம்

# தலைமைப் பதவியைக் கைப்பற்ற
# ஐ.தே.கட்சிக்குள் ஒருசாரார் முயற்சி

## சவாலை எதிர்கொள்ளத் தயார் - ரணில்

(நமது நிருபர்)

**ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இதுவரை காலமும் நிலவிவந்த உட்கட்சிப் பூசல் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை கட்சியில் இருந்து வெளியேற்றுமளவிற்கு விரிசல் அடைந்துள்ளது, இந் நிலையில் ரணில் விக்கிரமசிங்கா கட்சியின் எம். பிக்களை அழைத்து இதுதொடர்பாக கலந்துரையாடியதை அடுத்து, கட்சியின் தவிசாளர் கருஜெயசூரிய, கட்சியின்செயலாளர் காமினி அத்துக்கோறளை இருவரும் இன்று ரணிலை சந்தித்துப் பேசவுள்ளனர்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கும் எதிர்க் கட்சித்தலைவர் பதவிக்கும் எத்தகைய சவால்கள்வந்தாலும் அதை எதிர்த்துப் போராடத்தயாராக உள்ளேன் இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியகட்சிக்குள் தனக்கு எதிராக மேற்கொள்ளப் பட்டுவரும்சதிமுயற்சியை அடுத்து ரணில் விக்கிரமசிங்கா அவசர அவசரமாக நோர்வேயில் இருந்து நாடு திரும்பி இருந்தார்.

கட்சிக்குள் தனக்கெதிராக நடைபெற்று வரும் சதிதொடர்பாக நேற்று கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப்அவர் பேச்சு நடத்தினார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை பதவிநீக்கம்செய்துவிட்டுகட்சித் தலைமைப் பதவியை ஒருபோதும் ஏற்கப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சமாதான முயற்சியில் ஈடுபடும் எண்ணம்அரசுக்குஇப்போதுஇல்லை

### ஆசிய பத்திரிகைக்கு கதிர்காமர் பேட்டி

(லண்டன்)

நாடு இன்றுள்ள சூழ்நிலையில் அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எந்தவொரு மூன்றாந்தரப்பு நாட்டின் மத்தியத்தத்தையோ நோர்வேயின் சமாதான முயற்சிகளையோ விரும்பவில்லை.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்தவாரம் ஆசியாவிலுள்ள பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில்அவர்மேலும் தெரிவிக்கையில் நாடு இன்று சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் நிலையில்இல்லை, நோர்வே சமாதான முயற்சியையோ மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தையோ அரசு விரும்பவில்லையென்று கதிர்காமர் கூறியுள்ளார்.

இதேவேளை இப்பேட்டி பெரும் வியப்பூட்டுவதாக அமைந்துள்ளதுடன் இதன் மூலம்அரசின் உண்மைநிலைப்பாடு என்ன என்பதையும். யுத்தத்தில் அரசுக்குள்ள

→ 8ஆம் பக்கம் பார்க்க

### பொருளாதாரத் தடையை நீக்கும்

## விடுதலைப்புலிகளின்கோரிக்கையை பிரதமர் ரட்ணசிறி நிராகரித்தார்!

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடைநீக்கப் படவேண்டுமென்று, அண்மையில் விடுதலைப் புலிகள் தெரிவித்த கோரிக்கையைப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா நிராகரித்துள்ளார்

சமாதானப் பேச்சுக்கு முன்னர் வடக்கு கிழக்கு பகுதியிலுள்ள பொருளாதாரத் தடையை நீக்குவதுடன் அரசு யுத்த நிறுத்தம்செய்ய வேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கை ஏற்க முடியாதெனவும், முன் நிபந்தனையற்ற சமாதானப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### உள்ளே...

அபிவிருத்தித் தொண்டர் தெரிவுக்கான நேர் முகப்பரீட்சைக்குஅழைக்கப்பட்டோரின் பெயர்ப் பட்டியல்.

## வன்னிப் பெருநிலப் பரப்புஎங்கும் மானிடத்தின் அவலத்தைகண்டேன்

### பத்திரிகையாளர் மேரிகத்தரின் விபரிப்பு

[லண்டன்]

தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னிப்பிரதேசத்திற்கு நான் சென்றதையிட்டு இலங்கை அரசு கடுங்கோபங் கொண்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் எனக்கேற்பட்ட சம்பவம் தொடர்பாகவும் என்னிடம் அவர்கள் மன்னிப்புக் கோரவில்லை.

இவ்வாறு லண்டன் சண்டேரைம்ஸ் பத்திரிகையாளர் மேரி கத்தரின் கொல்வின் தனது வன்னிப்பயணம்

→ 8 ஆம் பக்கம் பார்க்க

### கனடாவில் புலிகளை தடைசெய்க

## 26-ந் திகதி நியூயோர்க்கில் ஆர்ப்பாட்டப்பேரணி

(கொழும்பு)

கனடாவில் விடுதலைப்புலிகள் அமைப்பைத்தடைசெய்யவேண்டுமெனக்கோரி எதிர்வரும் 26ந் திகதி வியாழக்கிழமை நியூயோர்க்கிலுள்ள கனடாத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டமொன்று நடைபெறவுள்ளது.

நியூயோர்க்கிலுள்ள இலங்கையர் களின் சங்கங்கள் சேர்ந்து இவ்வார்ப்பாட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளனர்

வியாழக்கிழமை இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தையடுத்து கனடாத் தூதுவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந

## விடுதலைப் புலிகளால் மரணதண்டனை

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் கடந்த 20ந்திகதி இருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது,

கொலைக்குற்றம், பாலியல் வல்லுறவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட தமிழீழ நீதிமன்றம் மகாலிங்கம் கமலநாதன், பிரான்சிஸ் சேவயர் ஆகிய இருவருக்கும் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்திருந்தது. (ம

### 7 கிலோ தங்கத்திலான

## சார்ஜா வெற்றிக் கேடயம் மத்திய வங்கியில்

[(கொழும்பு)]

சார்ஜா சாவதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணிக்குக் கிடைத்த எட்டு லட்சம் ரூபா பெறுமதியான ஏழு கிலோ எடையுள்ள 24 கரட் தங்கத்தினாலான கேடயம் பலத்த இராணுவப் பாதுகாப்புடன் மத்திய வங்கியில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சார்ஜா வெள்ளிக கேடயத்தை தட்டிக் கொண்ட இலங்கை அணிக்கு ஜனாதிபதி தனது பாராட்டுக்களைத் தெரிவிததுள்ளார். [ந-4

## அமைச்சர்களின் பணியாளர்கள் குறைப்பு ஆயிரம்பேர் வேலையிழப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், தமது உதவியாளர்களின் எண்ணிக்கையினைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஜனாதிபதியின் உத்தரவையடுத்து,

அமைச்சர்கள், பிரதிஅமைச்சர்களின் உதவியாளர்கள் ஆயிரம் பேர் வேலையிழந்துள்ளனர்.

ஒரு அமைச்சருக்கு உதவியாளர்களாக இருககக் கூடிய 34 பேரின் எண்ணிக்கையை 20 ஆகக் குறைததலும,

(8ஆம் பக்கம் பார்க்க)

## மேரிகத்தரின் நியூயோக்கில்

(நியூயோக்)

வவுனியாவில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காயமடைந்த லண்டன் சண்டேரைம்ஸ் பத்திரிகையின் செய்தியாளர் மேரி கத்தரின் கொல்வின் கண் சத்திர சிகிச்சைக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று மு.ப 10.00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து எட்டுத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

(உ-10)

## சமுர்த்தி செயலணி

(செம்பியன்பற்று)

சென்ற புதன்கிழமை மணற்காடு நோ. க. த க. பாடசாலையில் மருதங்கேணி பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்களால் சமுர்த்தி செயலணி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

(உ-42)

# வடமராட்சி கிழக்கில் விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு

## பயிர் நிலங்கள் தரிசாக காட்சி

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கில் 80 வீதமான விவசாய நிலப்பரப்பு கைவிடப்பட்ட நிலையில் தரிசு நிலமாகக் காட்சியளிப்பதாக அங்கு மேற்கொண்ட தகவல் திரட்டுகை மூலம் அறியக்கிடக்கிறது.

தொடரும் போர் நிலவரங்களினால், பொதுமக்கள் சென்று தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத அளவுக்கு பாதுகாப்பற்ற பிரதேசங்களாக அவை காணப்படுகின்றன.

இதனால் வடமராட்சி கிழக்கின் விவசாயக் குடும்பங்கள் கையறு நிலையில் கலங்கி நிற்பதுடன், இப்பகுதியில் நிலவிய விவசாயத் தன்னிறைவும் சீரழிவுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-42)

## மின் தாக்கி இளைஞன் பலி

(கோப்பாய்)

பேக்கரியொன்றுக்கு இரவு வேளை சட்ட விரோதமாக மின்சாரம் பெற முயன்றவர் மின் தாக்கி பலியாகியசம்பவம்(புதன்கிழமை 18.4.2001 கோப்பாய் வடக்கில் நடைபெற்றுள்ளது (மிருசுவில் பகுதியைச் சேர்ந்த விநாயகமூர்த்தி சுதர்சன் என்ற பதினாறு வயது வாலிபரே மேற்படி சம்பவத்தில் பலியானவராவார்.

(க-79)

## கைது செய்யப்பட்ட ஆறு தமிழ் இளைஞர்கள் நாளை நீதிமன்றில் ஆஜர்

(புலோலி)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஆறு தமிழ் இளைஞர்களும் மீண்டும் 24 ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதவான் பிரியந்த பெர்ணாண்டோ முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் கைது செய்யப்பட்ட பொன்னுத்துரை ஜெயக்குமார் (வயது 29) உரும்பிராய் கிருஸ்ணபிள்ளை விஸ்ணுவரதன் (வயது 29) நெல்லியடி, அழகர்சாமி திலீப்குமார் (வயது 32) மன்னார், கனக (சூரியர்மாதவராஜா வயது33), திருகோணமலை காதர் பக்கீர் நம்பர் (வயது 31) கொழும்பு, சிவபாதம் சுதாகரன் (வயது 29) முல்லைத்தீவு ஆகிய 6 இளைஞர்களும் கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் அஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கொழும்பு கோட்டை நீதவான் பிரியந்த பெர்ணாண்டோ முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட இன்னொரு இளைஞரான மட்டக்களப்பைச் சேர்ந்த பரமசிவம் மகேஸ்வரநாதன் (வயது 32) அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 5 ஆம் திகதி பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட பருத்தித்துறை சுப்பர் மடத்தைச்சேர்ந்த நாகராஜா நாகேந்திரன் (வயது 26) பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிஸாரினால் தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

இவர் வெளிநாடு செல்வதற்காக கொழும்பிற்கு மனைவி பிள்ளையுடன் வந்து கொச்சிக்கடையிலுள்ள 'லொஜ்' ஒன்றில் தங்கியிருந்தசமயமே கைதுசெய்யப்பட்டார்.

இதே சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைப்பாறிய தபாலதிபர் எஸ் வீரசிங்கம் நெல்லியடி (வயது 65) நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

(க-52)

## சில்லறை பணத்திற்கு தட்டுப்பாடு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சில்லறை நாணயங்களுக்குத் தொடர்ந்தும் பெரும் தட்டுப்பாடு இருந்து வருகின்றது.

இதன் காரணமாக பொதுமக்கள் நாளாந்தம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

புதுவருடப்பிறப்புக் காலத்தில் சில்லறை நாணயங்கள் வியாபார நிலையங்களில் ஓரளவு புழக்கத்தில் இருந்த போதிலும்கூட அதன்பின்னர் தட்டுப்பாடாகவே இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்

[உ-77]

## காணாமற் போனோர் தொடர்பான விசாரணை அழைக்கப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தும் வகையில் மீண்டும் கொழும்பில் இருந்து புலனாய்வுப் பிரிவினர் வருகை தந்துள்ளனர்.

காணாமற் போன 219 பேரின் பெயர்ப்பட்டியல்களோடு வந்துள்ள புலனாய்வுப் பிரிவினர் கீழ் வருவோரின் உறவினர்கள் மற்றும் தெரிந்தவர்களை நேரடியாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்யுமாறு அறிவித்துள்ளனர்.

1) வேலாயுதப்பிள்ளை செல்வராசா ஆனைக்கோட்டை வீதி கொக்குவில்.

2) நடராசா சசிகாந் நீர்வேலி மத்தி நீர்வேலி.

8) தவமணி மொரேஸ்வரன் 130 கனகரட்ணம் வீதி அரியாலை.

4) கந்தசாமி ஜீவராஜ் சண்முகம் வீதி சாவகச்சேரி.

5) பூபதி அரவிந் 3ஆம் கட்டை சிங்கராசாலேன் கட்டப்பிராய் யாழ்ப்பாணம்.

6) சுந்தரம் ரவீந்திரன் 54/9 ஆத்திசூடி வீதி கந்தர் மடம் யாழ்ப்பாணம்.

7) சவரிமுத்து அன்ரன் ஜெயக்குமார் 136, ஆத்திசூடி கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

8) செல்லத்துரை செல்வராசா நாவற்குழி சாவகச்சேரி.

9) கணேச சிவராம் கைதடி நாவற்குழி.

10) கந்தசாமி தயாசிலன் 697, கச்சேரி வீதி நல்லூர் யாழ்ப்பாணம்.

11) பரமநாயகம் ஜெகநாயகம் 678, முள்ளி அரியாலை.

12) பண்டாரி ராஜசிங்கம் முள்ளி அரியாலை.

13) சிவபாக்கியம் சிவமோகன் 198, சென் பெனடிக் வீதி அரியாலை.

14) ராமநாதன் அன்னலிங்கம் மறவன்புலவு சாவகச்சேரி.

15) நிக்கொலஸ்டஸ் எட்வின் 151, கொழும்புத்துறை யாழ்ப்பாணம்.

16) பாலரத்தினம் ஜெயமோகன் 183, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்.

17) பற்றிக்ஸ் மேரி ரவி 6/3 மத்தியூஸ்றோட் யாழ்ப்பாணம்.

18) பாலசுப்பிரமணியம் 47, யமுனா வீதி நல்லூர் யாழ்ப்பாணம்.

19) சேவியதாஸ் றெஜினோட் றூபராஜ் 310, பி.பி.டி. நல்லூர் யாழ்ப்பாணம்.

20) செல்லத்துரை சாந்தகுமார் 50/15, செட்டித்தெரு வீதி யாழ்ப்பாணம்.

### பருத்தித்துறை பொலிஸ் நிலையம்

1) கந்தையா சிவபூரணமூர்த்தி மீசாலை கொடிகாமம்.

2) நாகமுத்து கிருஸ்ணகுமார் தவசிகுளம் கொடிகாமம்.

3) விஜயராஜ் விநாயகமூர்த்தி இந்துபுரம், பளை.

4) சிந்தம்பிள்ளை சுதர்சன் மட்டுவில் சாவகச்சேரி.

5) ரஞ்சினராசா கலைமதி புத்தூர் மேற்கு புத்தூர்.

6) அந்தோனிப்பிள்ளை நெப்போலியன் வி.எம்.டி லேன் பளை சாவகச்சேரி.

7) சிவசுப்பிரமணியம் கோணேஸ்வரன் நாவற்காடு அச்சுவேலி.

8) சின்னத்தம்பி அம்பிகாபதி ஏகாம்பர வீதி வல்வெட்டித்துறை.

9) மார்க்கண்டு சசிகரன் நாவற்காடு அச்சுவேலி.

10) கணபதி சசிகரன் அல்வாய் கொடிகாமம்.

### சுன்னாகம் பொலிஸ்நிலையம்

1) செல்வநாயகம் வசந்தமோகன் இணுவில் சுன்னாகம்.

2) பாலசிங்கம் உதயகுமார் எ. சி. லேன், சுன்னாகம் உடுவில்.

3) லோகநாதன் அற்புதராசா இணுவில் மேற்கு இணுவில் சுன்னாகம்.

4) கந்தசாமி சுபேரகரன் கதிர்காமர் கோயிலடி நீர்வேலி.

5) பூபாலசிங்கம் பிரபாகரன் நீர்வேலி. யாழ்ப்பாணம்.

6) நாகரட்ணம் சிவறூபன் நீர்வேலி யாழ்ப்பாணம்.

7) நாகராசா பாலகிருஸ்ணன் எ.ஜி.ஏ அலுவலக வீதி சுன்னாகம்.

8) சின்னத்தம்பி சிவலிங்கம் சபாபதிப்பிள்ளைவீதி சுன்னாகம்.

9) பொன்னுத்துரை குணசேகரம் மின்சார வீதி சுன்னாகம்.

10) வேலாயுதம் கௌரிபாலன் பிள்ளையார் கோயிலடி கட்டுவன், தெல்லிப்பழை.

(உ-10)

## பாலம்

(வலம்புரி பல்சுவை இலக்கியமையம்)

### இலக்கிய கர்த்தாக்களே ஒருநிமிடம் . . .

உங்கள் ஆக்கங்கள் வந்து
குவிந்த வண்ணமேஉள்ளன
அத்தனையும்
பாலம்
வலம்புரி பல்சுவை
மையத்தில்
வலம் வரவுள்ளன...
இந்த வேளையில்
உங்களுடன் சில
வார்த்தைகள்,
நல்ல தொரு களமின்றி
தேங்கிவிட்ட
உங்கள் எண்ணங்கள்
உணர்வலைகள்
தவிப்புகள் மிகப் பெரிது.
நாளடைவில் உங்கள்
பெரு இலக்கிய
முயற்சிகளுக்கும்
வலம்புரி களம் சமைக்கும்
ஆனால் இப்பொழுது.
உங்கள் எண்ணங்களை
வடிகட்டி வரையறுத்து
சுருக்கமாக இறுக்கமாக
எழுதி அனுப்புங்கள்...
கதை கட்டுரைகள்
போன்றவற்றை
150 சொற்களுக்கு
மேற்படாத வகையிலும்,
கவிதைகள்
30 சொற்களுக்குள்
உள்ளடங்கியதாகவும்
மற்றும்
நகைச்சுவை துணுக்குகள்
படித்து சுவைத்தவை
விமர்சனங்கள்
கருத்தாக்கங்கள்
பல்சுவை தொகுப்புகள்
அனைத்தும்
எதிர்பார்க்கப்படுன்றன.

[ஆ-ர்]

## அபிவிருத்தித் தொண்டர்களுக்கு மேலும் இரு மாதங்கள் அடிப்படைத்திறன் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

அபிவிருத்தித் தொண்டர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு 6 மாதங்களுக்கு அபிவிருத்தி தொடர்பான வேலைகளுக்கு பயிற்சி வழங்கப்படுவதுடன், மேலும் இரு மாதங்களுக்கு அடிப்படைத் திறன் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

கடந்த 19 ஆம் திகதியன்று யாழ் மாவட்ட அரச அதிபர் கே.சண்முகநாதனுடன் செயலகத்தில் நடத்தப்பட்ட அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்தில்,

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு தமிழ் விவகாரங்களின் பொறுப்பாளர் எஸ் நல்லையா தலைமையிலான குழுவினர் இதனைத் தெரிவித்தனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் 35 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 12 பயிற்சி நிலையங்களில் இடம்பெறவுள்ள அபிவிருத்தித் தொண்டர் பயிற்சி மே மாதத் தொடக்கத்தில் ஆரம்பமாகவுள்ளது எனவும் இக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இப் பயிற்சி நெறி இடம்பெறும் நிலையங்களுக்கு இரு அபிவிருத்திபரிசோதகர்களாக பட்டதாரிகள் நியமிக்கப்பட்டு மாதந்தம் 7 ஆயிரத்து 500 ரூபா ஊதியம் வழங்கப்படவிருப்பதுடன்,

ஒவ்வொரு பயிற்சி நிலையத்திற்கும் 5 போதனாசிரியர்கள் நியமிக்கப்பட்டு இவர்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா சம்பளமாக வழங்கப்படும்.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் இணைப்பாளர்களாக தொழிற்படும் மூவருக்கும் போக்குவரத்துச் செலவு உட்பட 10 ஆயிரம் ரூபா மாதாந்த வேதனம் வழங்கப்படும் எனவும் இக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## குளிப்பதற்காக சென்ற யுவதி கிணற்றுக்கு பலி

### துன்னாலையில் சம்பவம்

(மந்திகை)

கிணற்றில் குளிப்பதற்காக சென்ற யுவதி வலி ஏற்பட்டதையடுத்து கிணற்றுள் வீழ்ந்து மரணமாகிய பரிதாபகர சம்பவம் துன்னாலை கோவிற்சந்தைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

அல்லசரையைச்சேர்ந்தஉலகேஸ்வரன்தயா (வயது17) என்பவரே மரணமானவராவார்.

சடலம் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(க-23)

## கோப்பாயில் கும்பாபிஷேசம்

கோப்பாய் மத்தி அருள் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பாலஸ்தபான கும்பாபிஷேசம் இம்மாதம் 25ம்திகதி நடைபெறவுள்ளது இதற்கான ஒழுங்குகள் ஆலய தர்மபரிபாலன சபையினர் மேற்கொண்டுள்ளனர்

(க-79)

## செயல் நூல் ஆக்கப் போட்டி

ஆரம்பக் கல்வி கற்கும் மாணவர்களின் ஆர்வங்களைத் தூண்டுவதற்கும் ஆக்க பூர்வமாகச் சிந்தித்துச் செயற் படுத்துவதற்கும் உதவும் வகையில் செயல் நூல் ஆக்குதல் சம்பந்தமான போட்டிகள் ஆசிரியர்கட்கிடையே வலய மாகாணமட்டத்தில் நடைபெறவுள்ளன.

(ச-79)

### வடக்கு - புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால்

# அபிவிருத்தி தொண்டர்களை தெரிவு செய்ய

# நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி-புனர்வாழ்வுபுனரமைப்புஅமைச்சினால் அபிவிருத்தித் தொண்டர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை அந்தந்தப் பிரதேசசெயலர் பிரிவு ரீதியாக நடைபெறவுள்ளது.

இதன் பிரகாரமாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் நாளை செவ்வாய்க்கிழமைகாலை10.30மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பிறப்புச் சான்றிதழ், நற்சான்றிதழ்போன்றவற்றுடன் தோற்றுமாறு ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் க. மணி பல்லவராஜன் (நிஷாந்தன்) கேட்டுள்ளார். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பெயர்விபரம் வருமாறு.

### பிரதேச செயலர் பிரிவு தென்மராட்சி

தெய்வேந்திரப்பிள்ளை நியமிளா- சின்னத்துரை விஜிதா- வைரமுத்து புவனேஸ்வரி- விக்கினேஸ்வரமூர்த்தி ஸ்ரீப்பிரியா- நாகமணி இராசமலர்- கிட்டிணன் லலிதா- மார்க்கண்டு றூபா- சங்கரப்பிள்ளை இந்துநிதி- சின்னராசாகருணா- மாணிக்கவாசகர் சுரேக்கா- இராசையா ஜெயந்தி- கணேசு ஜெயந்தி- திருச்செல்வம் நளினி- தேவராஜா வாசுகி- செல்வராஜா தீபா- இளையதம்பி வக்சலா- ஆனந்தம் அனுசா- ஜெகநாதன் அமுதினி- நடராஜா சங்கீதா- இராதாகிருஸ்ணன் கேதீஸ்வரி- கதிரவேலு சுபவதனி- தர்மலிங்கம் இந்திரா- வல்லிபுரம் சுபத்திரா- சுந்தரம்பிள்ளை புஸ்பராணி-

இராசரத்தினம் ரூபன்- துரைசிங்கம் துஸ்யந்தன்- பூதன் தயாரசிங்கன்- சின்னத்தம்பி துரைகோபி- பரமசாமி ரகுபதி- செல்லை கணேசரத்தினம்- சிவசம்பு கலைவாணி- இரத்தினம் ஜெயா- சிவசுப்பிரமணியம் ராதிகா- தர்மலிங்கம் ஜெயச்சித்திரா- கதிர்காமநாதன் தேன்மதி- தேவராசா ராஜேஸ்வரி- வீரசிங்கம் தேவராணி- திருநாவுக்கரசு மேரி நவரத்தினம்- தம்பிப்பிள்ளை ரகுசாந்தா- சிவனேஸ்வரி கிருஸ்ணபிள்ளை- சின்னமணி ஜெயசுதா- நடராசா ஸ்ரீநந்தினி- வைரவநாதன் மதனிகா- முருகேசன் நகுலேஸ்வரி- பொன்னம்பலம் உத்தமாறாகினி- சின்னராசா சுமதினி- கந்தசாமி தீபா- பொன்னம்பலம் திலகராணி- சண்முகலிங்கம் கிரிசாந்தி-

கந்தசாமி கலைமாறன்- சிவசுப்பிரமணியம் பிரகாஸ்- நீக்கிலாப்பிள்ளை ஜெபநேசன்- இராமு மயூரன்- சண்முகம் சசிகரன்- மரியாம்பிள்ளை அமலினி- கந்தையா சிவகுருநாதன் பேதுறுப்பிள்ளைமரியநாயகம்- சண்முகம் குகதாசன்- நடராஜா பிரகலாதன்- ஐயாத்துரை சசீதரன்-சுப்பிரமணியம் பிரகாஸ்- அருளம்பலம் கருணாகரன்-சிவராசா தவேந்திரன்- சிற்றம்பலம் தயாபரன்- ஸ்ரீமோகன்- சின்னக்குட்டி கமலதாசன்- புண்ணியர்கணேசலிங்கம்-பொன்னுத்துரை யோகேஸ்வரன்- பாலசிங்கம் ரதிகரன்- கதிர்காமு சிசுகுந்தன்- மரியதாஸ் மனோகரன்- கறுப்பையா சத்தியசீலன்- பொன்னுத்துரை இரத்தினகுமார்- பஞ்சாட்சரம் அருள் சுதர்சன்- தங்கராசா சிவசோதி-இராமலிங்கம் கிரிஜா- சின்னத்துரை மல்லிகாதேவி-

கந்தன் இரவீந்திரன்- சின்னத்துரை சத்தியசீலன்-செல்வராசா றோகன் - குணரத்தினம் பிறேமதாசன்-சின்னத்தம்பி அமிர்தரன்- கணபதிப்பிள்ளை தவரூபன்-சிவபாதம் திலீபன்-வேலன் தர்மராசா- இராசாமுத்து கிரிதரன் - யோகராசா யுகதர்சன்-பரமலிங்கம் கஜேந்திரன்.

கந்தசாமி சற்குணம்-தெய்வேந்திரம்பிள்ளை குமரன் - கந்தன்சிவபாதம்-மகாலிங்கம் ஜெயக்குமார் - பரமசாமி ரவிச்சந்திரன் - தங்கராஜா விஜயகுமார்- குஞ்சுப்பிள்ளை அன்னராசா-வேலன் பரமேஸ்வரன்- வினாசித்தம்பி - சிவகேசன் - வைரமுத்து கேதீஸ்வரன்-சின்னத்தம்பி சபேசன்- தர்மலிங்கம் குகேந்திரன் கிருஸ்ணமூர்த்தி மகேந்திரராசா-செல்வராசா அமுதன்.

மயில்வாகனம் மஞ்சுளா- மயில்வாகனம் மாலினி- செல்லத்துரை உதயகுமாரி- வல்லிபுரம் சிவனேஸ்வரி- குமாரவேலு புஸ்பராணி- இராமசாமி உதயா-வன்னியசிங்கம் கேதா - பாலசிங்கம் கிறிஸ்ரின் ஜெயசீலி - மரியநாயகம் மேரி டொனா.

இலகுப்பிள்ளை மோகனச்செல்வி - இரத்தினம் விஜயகுமாரி - ஞானப்பிரகாசம் ஞானசோதி - அல்பிரட் நிர்மலா - இராசையா கிருஸ்ணலட்சுமி - கண்ணதாசன் பூமலர் நவரத்தினராஜா நிரஜா - சிவபாதம் கவிதா மலர்.

நவரத்தினராஜா ரூபவதனி அருட்செல்வம் அருந்தவமலர் கணபதி மனோகரி - விக்கினேஸ்வரன் பூமணி-விநாயகமூர்த்தி லலிதாராஜேஸ்வரி- ஆனந்தராசா இந்திராதேவி.

சுல்தான் றில்வான்-கந்தசாமி வர்ணன்- சுப்பிரமணியம் பீற்றர்-பர்சீலன் வின்சன் றோயல் - ஹபி முகமட்- கிருஸ்ணபிள்ளை வசீகரன்.

வேலு சத்திவேல்-யேசுதாசன் அஜித்குமார்-துரைசிங்கம் சோநாதன்- கனகரத்தினம் ஜெயரூபன்-சின்னையா பாஸ்கரன்-கந்தர் பாலகிருஸ்ணன்-கதிரவேலு நிதாகரன்.

வரதராஜா றஜிதா-ஆனந்த வடிவேல் நகுலேஸ்வரி-நித்தியானந்தன் சங்கீதா-அப்புத்துரை யாழினி - ஜெயராசா சுதாகினி-பாக்கியநாதன் அனுசா -யேந்திரன் பராசத்தி ஜெயபாலன் அம்பிகா-கந்தசாமி வித்தியா.

பெருமாள் ரஜினி- சின்னையா கீதா-பொன்னுத்துரை ஜெயந்திமலர்-தம்பு விஜயகௌரி- பொன்னம்பலம் கோகுலவதனி-மகேந்திரராஜா றஜனி-விக்னேஸ்வரமூர்த்தி ஸ்ரீரதி-வினாசித்தம்பி அருட்செல்வி-சந்திரன் சசிகலா-இராசையா புனிதமலர்.

சின்னையா பத்மரஜனி- சிவபாதம் சிவரஞ்சினி-கனகலிங்கம் காஞ்சனாதேவி-கதிர்காமநாதன் சிவாஜினி- கந்தையா சரஸ்வதி-கீதர் சிவசோதி-வைரவராஜா கஜேந்தனா.

★ ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரம் நாளை வெளிவரும்(ந)

## ரயில் வண்டி தடம் புரண்டது

(கொழும்பு)

ரயில் நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு ரயில்வண்டி ஒன்று தடம் புரண்டது.

இச்சம்பவத்தின் போது ரயிலில் பயணம் செய்தவர்களுக்கு ஆபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும், அதே வேளை ரயிலில் பயணிகள் பெட்டி ஒன்றுமட்டுமே தண்டவாளத்தை விட்டு விலகியதாகவும் ரயில்வேக் கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது. (உ-4)

## கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச்சங்கம்,யாழ் மாவட்டக் கழகங்களிடையே நடாத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றும் போட்டித் தொடரில், யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்ட களத்தில் இன்று பி. ப. 4.00 மணிக்கு ஜொலிஸ்ரார் வி. க. எதிர் ஓல்ட் கோல்ட்ஸ்.பி.ப. 5. 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக அணி எதிர் ஓல்ட்கோல்ட்ஸ் அணிகள் மோதவுள்ளன. (உ)

## தீர்த்த மண்டபம்

(இணுவில்)

இணுவில ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலின் புதிய தீர்த்த மண்டப அமைப்பு வேலைகள் இடம் பெற்று வருகின்றன. (உ-49)

## 450 கிராம் பாண் 11 ரூபாவாக விற்பனை

(செம்பியன்பற்று)

குடாநாட்டில் பெரும்பாலான கடைகளில் 11 ரூபாவாகப் பாண் விற்பனையாவதாக நுகர்வோரால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

450 கிராம் பாணின் விலை 10.50 என வரையறை செய்யப்பட்டுள்ள போதிலும் சில்லறைக்கு நிலவும் தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி 11 ரூபாவாகப் பாண் விற்பனை செய்யப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இதே வேளை, பாணின் நிறை திருப்திகரமாய் இல்லாதிருப்பது குறித்தும் பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [உ-42]

## பட்டதாரி பயிலுநர் மூவர் தென்மராட்சியில் நியமனம்

(மந்திகை)

பட்டதாரிப்பயிலுநராக திருகோணமலைக்கு நியமனம் பெற்ற மூவர் தென்மராட்சி வலயத்திற்கு மீள் நியமனம் பெற்றுள்ளனர்.

ரேவதி தம்பிக்குட்டி கோண்டாவில்வடக்கு, கந்தசாமி சத்தியானந்தன் சமரபாகு உடுப்பிட்டி. வேதநாயகம் மேரிபுஸ்பமாலா உயரப்புலம் ஆனைக்கோட்டை,

ஆகியோரை உடனடியாக தென்மராட்சி வலயத்திற்கு சமுகமளித்து கடமையை பொறுப்பேற்குமாறு வலய கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க-23)

### தென்னிலங்கை பத்திரிகையாளருக்கு

## பனை ஓலை விசிறிகள் புழுக்கத்தை போக்கவாம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ். வந்த தேசிய சமாதானப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் தென்னிலங்கை பத்திரிகையாளர்களுக்கு அதீத புழுக்கத்தைப் போக்கும் வகையில் நல்லை ஆதீனத்தில் பனையோலை விசிறிகள் வழங்கப்பட்டன.

யாழ். குடாநாட்டு நிலவரங்களை நேரில் கண்டறியும் வகையில் இங்கு வந்த மேற்படி குழுவினர் கடந்தவெள்ளியன்று நல்லை ஆதீனத்திற்கு விஜயம் செய்து கலந்துரையாடினர்.

அவ்வேளை, மின்சாரம் நின்று விடவே, அங்கு மின் விசிறிகள் செயலிழந்து அதீத புழுக்கம் நிலவியது.

நிலைமையைப் புரிந்து கொண்ட ஆதீன நிர்வாகத்தினர் அங்கு பிரசன்னமாகியிருந்த அனைவர்க்கும் ஒவ்வொரு பனையோலை விசிறிகளை வழங்கினர்.

இதனை மிக ஆவலுடன் பெற்றுக் கொண்ட தென்னிலங்கையைச் சேர்ந்தோர், சுவாரஸ்யமுடன் அதனைப் பயன்படுத்தியமையை அவதானிக்க முடிந்தது. (உ-124)

## மாணவர் திறன் கண்காட்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

'புத்துலகிற்கானபாதை' மாணவர் திறன் கண்காட்சி 2001 எனும் தலைப்பில் கண்காட்சிப் போட்டி ஒன்றினை நடாத்தவும் காட்சிப் பொருட்களை முன்வைத்து வெற்றிபெறுவோர்க்கு திறன் சான்றிதழ், பரிசு வழங்குவதற்கும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாடசாலைமட்டம், கல்வி வலயமட்டம், அகில இலங்கை மட்டம் என மூன்று நிலைகளில் இப்போட்டிகள் இடம் பெறவுள்ளன [உ-10]

# யாழின் உண்மை நிலையை தத்ரூபமாகச் சித்தரித்த நாடகம்

### சமாதானப்பேரவையினர் வியப்புடன்ரசிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமிழ் பேசும் மக்களுக்கு, மாணவர்களுக்கு, இளைஞர், யுவதிகளுக்கு இராணுவத்தினால் இழைக்கப்படும் சிரமங்கள், கொடூரங்களையும் அரசினால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் உரிமை மீறல் நடவடிக்கைகளையும், நேற்று முள்தினம் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற சமாதானப் பேரவையினருக்கு புலப்படுத்தும் வகையில் பல்கலைக்கழக மாணவர்களினால் கலை நிகழ்வொன்று நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதி நிதிகள், மாணவப் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோரைச் சந்தித்தபின் கலை நிகழ்விற்கு வருகைதந்த சமாதானப் பேரவையினரை இராணுவத்தினர் தமிழ் மக்களை நடத்தும் முறையில் (அடையாள அட்டை பார்த்தல், அணியாக நிற்கவிடல்) வரவேற்ற இராணுவ வேடமணிந்த மாணவர்கள் இங்கு நிலவும் மின் சீரற்ற நிலையை வெளிப்படுத்தும் வகையில் மின்வசதியற்ற கலையரங்கினுள் அழைத்துச் சென்றனர்.

அங்கே சமாதானத்திற்கான போர் என்ற போர்வையால் தமிழ் மக்களை அழிக்கும் அரசின் யுத்தத்தையும், தமிழ் மக்களுடைய அபிலாசைகளையும் வெளிக்கொணரும் வகையிலும் கலை நிகழ்வு தத்ரூபமாகச் சித்தரித்துக் காட்டப்பட்டன. இக்கலை நிகழ்வுகளைக் கண்டுகளித்த சமாதானப் பேரவையின் பிரதிநிதி ஒருவர் அக்கலை நிகழ்வின் மூலம் தமிழ் மக்களின் உணர்வுகளைத் தாம் விளங்கிக் கொள்வதாகவும் அவற்றினை தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக் கூறும் ஓர் சிறிய பங்கினையே தாம் ஆற்றக் கூடிய நிலையிலிருப்பதாகவும், யுத்தத்தின் பாதிப்பு தமக்கும்உண்டு எனவும் தெரிவித்தார். (க-2-6)

## சமாதானப்பேரவை தாமதம் பொதுமக்கள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்குவிஜயம் செய்த, தேசிய சமாதானப் பேரவையினர் கடந்த வெள்ளியன்று காலை வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தை தரிசிப்பதென அறிவித்திருந்த போதிலும், மாலையே அந்நிகழ்வு கைகூடியது.

இதனால் குழுவினரைச் சந்திப்பதற்கு ஆவலோடு காத்திருந்த பலர் ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்றமையை காணமுடிந்தது.

இச் சம்பவங்களை அவதானித்த பெரியவர் ஒருவர், சமாதானப் பேரவையே இவ்வாறு தாமதமெனில், சமாதானம்பற்றி நினைக்கவே தேவையில்லை என ஆதங்கப்பட்டார். (உ-124)

# விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இனப்போருக்குச் சமாதானம் காணப்படவேண்டும் என்ற நோக்கில் கடந்தஐந்து மாதகாலமாக விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்துவருகின்றனர். ஆனால் அரசாங்கமோ யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதில் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. அரசிற்கு சமாதானம் மீது உண்மை ஆர்வம்இருந்தால் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கிச் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் யாழ்ப்பாணம் வந்த சமாதானப் பேரவையினரிடம் கையளித்த மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அரசு இச்சந்தர்ப்பத்தினை தவறவிட்டால் நாடு பேரழிவைச் சந்திப்பது தவிர்க்க முடியாது போகும். கடந்த காலங்களில் சமாதானத்திற்காக குரல் கொடுத்து வருகின்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி விசமப்பிரசாரம் செய்வதோடு மாணவர் போராட்டங்களை நசுக்குவதற்கும்பல்கலைக்கழக மாணவர்களிடையேயான ஐக்கியத்தைக் குலைப்பதற்கும்யாழ்.படைத்தரப்பு தீவிர பிரசாரங்களை மேற்கொண்டு வருவதோடு மாணவர்களைத் தனித்தனியாக அச்சுறுத்தியும் வருகிறது.

சமாதானத்திற்காக குரல் கொடுத்து வரும் மாணவர்களின் கோரிக்கைகளை செவிமடுக்காது அரசு தொடர்ந்தும் யுத்தத்தில் ஆர்வம்காட்டுமாயின் யாழ் குடாநாட்டு மக்களிடம் இருந்தும் மாணவர்களிடம் இருந்தும் அரசு பெரும் எதிர்ப்பினைச் சந்திக்க வேண்டி இருக்கும் என்பதனையும் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

### அவசர கால சட்டம்

தற்போது அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இருக்கும் அவசரகாலச்சட்டமும், பயங்கரவாத தடுப்புச்சட்டமும், நூற்றுக்குநூறு வீதம் சிங்கள பெரும்பான்மை மக்களின் பாதுகாப்பிற்காகவும் இராணுவ நலன்களுக்காகவுமே அமுல்படுத்தப்படுகிறது. இதனால் தமிழ் மக்கள் படும் துன்ப துயரங்களுக்கு அளவு கிடையாது. எனவே இச்சட்டங்கள் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

யாழ் குடாநாட்டில் மக்களும், மாணவர்களும் மரண பயத்துடன் வாழ்கின்றார்கள். அபிவிருத்திகள் எதுவும் இடம்பெறவில்லை மக்களையும் உலகையும் ஏமாற்றுவதற்காக சிறு சிறு செயற்திட்டங்கள், புனரமைப்பு என்ற போர்வையில் இடம் பெறுகிறது.

இந்நிலை தொடராது தடுத்து நிறுத்த வேண்டும். அதற்காக அரசாங்கம் நேர்மையுடன் செயற்பட வேண்டும். உடன் யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்கான உகந்த சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு நாட்டில் அமைதியும் சமாதானமும் சுபீட்சமும் ஏற்படவேண்டும்.

### மறுக்கப்பட்ட உரிமைகள்

1948 ஆம்ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இலங்கை வாழ் தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழவிரும்பினர், இணைந்து வாழமுடியும் என நம்பினர். எனினும் மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறிய சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவதற்கு பதிலாகஅவர்களது உரிமைகளைப் பறிப்பதிலேயே ஆர்வம்காட்டினர்.

அதுமட்டுமன்றி சிங்கள அரசியல் தலைமைகள் இலங்கையிலுள்ள பூர்வீகக்குடிகளான தமிழ் மக்களை அடியோடு அழித்துவிடக் கூடிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டதன் மூலம் படிப்படியாக தமிழர் தாயகப் பிரதேசத்திலிருந்து அவர்களை அகதிகளாக்கி ஏதிலிகளாக்கத் தொடங்கியது.

அது மட்டுமன்றி தமிழர்கள் மீதான இன அழிப்புநடவடிக்கையிலும் ஈடுபட்டது. தனது இராணுவத்தினையும், பொலிஸாரையும், சிங்களக் குண்டர்களையும் பயன்படுத்தி தமிழ் மக்கள்மீதான கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற செயற்பாடுகளை முடுக்கி விட்டதன் மூலம் இலங்கையின் ஓர் இனப் பிரச்சினைக்கான தோற்றத்திற்கு அத்திவாரமிட்டது.

இந்நிலையில் தான் தமிழ் மக்கள் தமது இருப்பினையும் வாழ்வு நிலையினையும் பாதுகாப்பதற்காக ஆயுதமேந்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. அதன் விளைவு தான் இன்றைய உள்நாட்டு யுத்தம். யுத்தம் இருதரப்பிலும் கோடிக்கணக்கான சொத்து அழிவுகளையும், இலட்சக்கணக்கான உயிர் அழிவுகளையும், அங்கவீனர்களையும் தோற்றுவித்துள்ளது.

இவ்வாறு அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# ஆலோசனை கூட்டம்

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் அமைப்பதற்கான காணி கொள்வனவு செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவின் பிரதேசசிறுவர் பாதுகாப்பு குழுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 10.00க்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் சிறுவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(க-23)

# பரீட்சை பெறுபேறுகள் அனுப்பிவைப்பு

(கோப்பாய்)

1999ல் நடைபெற்ற அதிபர் தரம் 1 தரம் 2 தரம் 3 க்கான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் கல்வி அமைச்சுக்குத் தற்போது அனுப்பப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர். தெரிவித்தார்..

(க-79)

# கைதடியில் பாடசாலைகள் இன்று முதல் ஆரம்பம்

[துன்னாலை]

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கைதடிப் பகுதிப பாடசாலைகள் இன்று முதல் வழமை போல் ஆரம்பமாகவுள்ளன.

கைதடிப் பகுதியில் 50% மான மக்கள் மீளக்குடியமர்ந்த நிலையில், மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் வகையில் பாடசாலைகள் இன்றுமுதல் ஆரம்பமாகவுள்ளன.

கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் உட்பட ஆறிற்கும் மேற்பட்ட பாடசாலைகள் இங்கு இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் இரண்டாம் தவணை விடுமுறைக்காக சகல பாடசாலைகளும் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன.

(க-41)

# பண்டாரவளை சம்பவம் வரும் 4 ஆம் திகதி முதல் பகிரங்க விசாரணை

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ படுகொலை சம்பவத்தை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழு எதிர்வரும்4ஆம் திகதி முதல் பகிரங்க விசாரணையை நடத்தவுள்ளது.

இவ்வாறு தனிநபர் ஆணைக் குழுவின் தலைவரும் மேல் முறையீட்டு நீதியரசரான பிஹச்கே குலத்திலக அறிவித்துள்ளார்.

இந்தப்பகிரங்க அமர்வுகள் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதுடன் இது தொடர்பான பத்திரிகை அறிவித்தல் அடுத்த சில வாரத்தில் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தின் போது வடக்கு - கிழக்கைச் சேர்ந்த அப்பாவித் தமிழ் இளைஞர் பலர் கொல்லப்பட்டமையும் அதனையடுத்து பதற்றம் நிலவியதும் ஏற்கனவே தெரிந்தவையே.

(க-05)

# 5 ஆயிரம் மீற்றர் ஓட்டம் சண்டிலிப்பாய் பி. செயலக அணி வெற்றி பெற்றது

(சுண்டுக்குளி)

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சினால் யாழ் மாவட்டத்தில் உள்ள செயலக பிரிவு அணிகளுக்கிடையே நடத்தப்பட்டுவரும் இவ் வருடத்திற்கான பல்வேறுவிளையாட்டுப் போட்டிகளில் ஓர் அங்கமாக இடம்பெற்ற 5 ஆயிரம் மீற்றர், 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டிகள் கடந்த 19, 20 ஆம் திகதிகளில் யாழ். மத்தியகல்லூரி விளையாட்டு மைதானத்தில் யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி ஏ. எவ்.கே. றூபசிங்கம்தலைமையில் நடைபெற்றன.

19 ஆம் திகதி காலை இடம்பெற்ற பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு-

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப்பிரிவு சி.சிவரஞ்சனி நா. மேரி, பருத்தித்துறை செயலகப் பிரிவு செ. அனுகிஷா.

ஆண்கள் பிரிவு போட்டியில் முதல் 3 இடங்களை பெற்றவர் விபரம வருமாறு.

கோப்பாய் செயலகப்பிரிவு த. துஷன், தெல்லிப்பழை செயலகப்பிரிவுத.ஜெயந்தன், பளை செயலகப்பிரிவு அ கருணாகரன்.

(உ-110)

# உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு ஆசிரியர்நியமனம்வழங்குக

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள உடற்கலவி போதனாசிரியர் பதவிகளுக்கு யாழ். பல்கலைக்கழகததில உடறகல்வி டிப்ளோமா பயிறசிபெற்றவர்களை நியமனம் செய்வதற்கு ஆவன செய்து தருமபடி யாழ்பபாணப் பலகலைககழக உடற்கலவி டிப்ளோமாதாரிகள சங்கம் வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு இந்து விவகார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் 1998 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட உடற்கல்வி டிப்ளோமா பயிற்சிநெறியில் 51 பேர் சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-77)

# ஏழு கோடி பெறுமதியான ஹெரோயின் மீட்பு

## முக்கிய புள்ளிகள் கைது

(கொழும்பு)

போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த முக்கிய பெரும் புள்ளிகள இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் தூத்துக்குடி பிரதேசத்தில் இருந்து கடல் மார்க்கமாக இழுவைப்படகு ஒன்றில் இலங்கைக்கு ஹெரோயின் போதைப் பொருள் எடுத்து வரப்பட்ட போது நேற்று முன்தினம் அதிகாலை நீர்கொழும்பு கடற் பிரதேசத்தில் வைத்து படகுடன் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளதையடுத்தே மேற்படியான முக்கிய பெரும் புள்ளிகள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை படகுடன் மடக்கிப் பிடிக்கப்பட்ட 35 கிலோகிராம் எடைகொண்ட ஹெரோயின் 7 கோடி ரூபா பெறுமதி உடையது என்றும் இவை கைப்பற்றப்பட்டதை அடுத்து மேலும் 6 பேர் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளதாகவும் பொலிஸ் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-4)

# ஈஸ்ரர் விழாவை ஒட்டி மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட்

(சுண்டுக்குளி)

1942 ஆம் ஆண்டு தொடக்கம் ஈஸ்ரர் விழாவையொட்டி ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் 20 பந்து பரிமாற்றங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டிஇவ்வருடமும் பால்குளம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற போது வாலிபர் அணி3ஓட்டங்களால் பெற்றியீட்டியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வாலிபர் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரி. கிஷாந்தன் 15 ஓட்டங்களையும், ஈ. தயாளன் 14 ஓட்டங்களை யும், ரி. வெஸ்லி 10 ஓட்டங்களையும் தமது அணிக்கு பெற்றுக் கொடுத்தனர்.

(உ-110)

# தனியார் கடை தீக்கிரை தம்பசிட்டியில் சம்பவம்

(மந்திகை)

தம்பசிட்டிப் பகுதியில் பாடசாலை முன்பாக அமைந்திருந்த தனியார் கடை இனந்தெரியாத நபர்களினால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி நள்ளிரவு நடைபெற்ற சம்பவத்தில் பெருந் தொகையான பொருட்கள் எரிந்து நாசமாகின.

சம்பவம் தொடர்பான விசாரணையை பருத்தித்துறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

(க-23)

## இன்று ஒரு தகவல்

# உண்மை பேசும் திருடன்

நீதிபதி நன்னன் வழக்கம் போல் நீதி மன்றத்தில் அமர்ந்திருந்தார். நான்கைந்து பேர் இளைஞன் ஒருவனைக் கட்டி யிழுத்துக் கொண்டு அங்கே வந்தனர். அந்த இளைஞன் காண்போரைக் கவரும்அழகு வாய்ந்தவனாக விளங்கினான்.

அவர்கள் 'நீதிபதி அவர்களே! இந்த இளைஞன் திருடும் பொழுது எங்களிடம் கையுங் களவுமாகப் பிடிபட்டான். தங்களிடம் இழுத்து வந்தோம். இளம் வயதினனான இவனைத் தாங்கள் தண்டிக்காமல் அறிவுரைகூறி அனுப்பினாலும் எங்களுக்குச் சம்மதமே' என்று சொன்னார்கள். அங்கிருந்த மற்றவர்களும் அவனைத்தண்டிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள்.

நீதிபதி அந்தஇளைஞனைப் பார்த்துத் திருடுவது தீமை எனவும், அப்படிப்பட்ட வாழ்வு கேவலமானது மட்டுமல்ல, பாவமானதுங் கூட எனவும் விளக்கிச் சொல்லிவிட்டு, இனித்திருடாதே. இது தான் உனக்குக் கிடைக்கும் கடைசி மன்னிப்பு என்றுகூறி அவனை விடுவிப்பார் என்று எல்லோரும் எதிர் பார்த்தனர்.

ஆனால் நீதிபதியோ அந்த இளைஞனிடம் அன்பாகப் பேசி அவனைக் கவர்ந்தார். 'இனி எப்பொழுதும் வாழ்க்கையில் உண்மையே பேசுவேன் என்று வாக்குறுதி கொடு' என்றார். அப்படியே அவனும் உறுதி செய்து விட்டு விடுதலை பெற்று வீட்டிற்குச் சென்றான். நடந்ததை அறிந்து எல்லோரும் ஏமாற்றமடைந்தனர்.

மறு நாள் இரவு திருட வேண்டும் என்ற எண்ணத்தில் இளைஞன் வீட்டை விட்டுப் புறப்பட்டான். 'யாராவது தன்னைப்பார்த்து எங்கே செல்கிறாய் என்று கேட்டால் என்ன பதில்சொல்வது? எப்பொழுதும் உண்மையே பேசுவதென்று உறுதி எடுத்து விட்டோமே வெற்றிகரமாகத் திரும்பினாலும், மறு நாள் யாராவதும் கேட்டால் திருடியதை ஒப்புக் கொண்டாக வேண்டுமே. தண்டனையிலிருந்துஎப்படித் தப்புவது' என்று சிந்தித்தான்.

உண்மை பேச முயலும் தன்னால் இனித் திருட முடியாது என்ற முடிவுக்கு வந்தான். அன்று முதல் நல்லவனாக அவன் மாறினான்.

**பேராசிரியர் எ. சோதி**

# வேலணையில் திருட்டு முயற்சி
# பெரும் தோல்வியாம்

(மண்டைதீவு)

வேலணையில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளையில் மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி ஒன்று பெரும் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு பணம் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் உட்சென்ற திருடர்கோஷ்டிஒன்று, இரும்புப் பெட்டியை உடைத்து பணத்தைத் திருட மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்காததை அடுத்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுள்ளனர். (க-11)

## தந்தை செல்வா
# நினைவு தின போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நூற்றாண்டு தேசியசபை (கல்விக் குழு) நடாத்திய போட்டியின் தேசியமட்டத்திலும், யாழ். மாவட்டத்திலும் வெற்றி பெற்றோர்.

தேசியமட்டம்திறந்தபோட்டி

கட்டுரை;

1 ஆம் இடம்-திரு. மாணிக்கம் வெற்றிவேல் (வட்டுக் கோட்டை) 2 ஆம் இடம்- திரு. நா.க. சண்முகநாத பிள்ளை (யாழ்ப்பாணம்) 3 ஆம் இடம்- ஜனாப். கெ. ஏ. அஷ்ரப் (நிந்தாவூர்)

கவிதை;

1 ஆம் இடம்- திரு. நா.க. சண்முகநாதபிள்ளை (யாழ்ப்பாணம்) 2 ஆம் இடம்-திரு. ப.க. குகதாசன்(நயினாதீவு) 3 ஆம் இடம்-திரு. ஆ. முரளீஸ்வரன் (மட்டக்களப்பு)

தேசிய மட்டம்- மாணவர்களுக்கிடையே போட்டி

கட்டுரை-

1 ஆம் இடம்- செல்வன் கு. செந்தீபன் (வவுனியா) 2ஆம் இடம்- செல்வி காமினி தம்பையா. யாழ்ப்பாணம்) 3 ஆம் இடம்- செல்வி. ஜரின் சுபத்திரா ஜீவரட்ணம் (யாழ்ப்பாணம்)

கவிதை;

1ஆம் இடம் செல்வன் கிருஷ்ணபிள்ளை குருபரன் (யாழ்ப்பாணம்) 2 ஆம் இடம் செல்வன் ஜெகான் தர்மேந்திரா (வவுனியா) 3ஆம் இடம் செல்வன் வீ. வசந்தராசா (கல்முனை

மாவட்ட மட்டம்-திறந்த போட்டி.

கட்டுரை:

1ஆம் இடம்- திரு.எஸ்.சகாய சீலன் (கோப்பாய்) 2ஆம் இடம் திருமதி.பி. பிலோமினா மேரிறோஸ் (யாழ்ப்பாணம் 3ஆம் இடம்- திரு அன்ரனி உதயகுமார் (யாழ்ப்பாணம்)

கவிதை:

1 ஆம் இடம் திரு எம் சிதம்பரநாதன் (தொல்புரம்) 2 ஆம் இடம் திரு அராலி பரமேஸ்வரசர்மா: 3 ஆம் இடம்- திரு க. த ஞானப்பிரகாசம் (கொடிகாமம்)

மாவட்ட மட்டம் மாணவர்களுக்கு இடையே நடாத்தப்பட்டது.

கட்டுரை:

1 ஆம் இடம்- செல்வி சசிரேகா [அச்சுவேலி] 2ஆம் இடம்- செவ்வன் சி. பத்மநாதன் [புத்தூர] 3 ஆம் இடம் செல்வி கவிதா செங்கேணி (வண்ணார்பண்ணை)

கவிதை:

1 ஆம் இடம் செல்வன் லதிஸ்லாஸ் அமலானந்த குமார் (யாழ்ப்பாணம்) 2 ஆம்இடம் செல்வன் ஜரின் சுமித்திரா ஜீவரட்ணம் (யாழ்ப்பாணம்)

இவர்களுக்கான பரிசில்கள் 25. 4 2001 புதன் கிழமை யாழ் பல்கலைக்கழகம் பேராசிரியர் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

தந்தை செல்வா நினைவு நாள் நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.

பதில் துணைவேந்தர்பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்மேற்படி நிகழ்வில் இந்திய திருச்சபை மேதகு ஆயர் ஜெபநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (க)

# கல்வி வாய்ப்பற்று சிதறி ஓடும்
# அவலவாழ்வுஇனிமேலும்வேண்டாம்

## சமாதானப் பேரவையிடம் இடித்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் தொடரும் யுத்தத்தால் வீடு இழந்து கல்வி வாய்ப்பற்று திக்குத் திசை தெரியாது சிதறியோடும் எமது பரிதாபநிலை இனிமேலும் வேண்டாம். பாடசாலைப் புத்தகங்கள் இல்லாமை, கல்விவாய்ப்பு மறுக்கப்பட்ட நிலைமை இவ் அழகிய தீவில் யாருக்கும் இனிமேல் ஏற்படக்கூடாது!

யாழ்ப்பாணம் விஜயம் செய்து அங்குள்ள நிலைமை தொடர்பாக ஆராய்ந்த சமாதானப் பேரவையினரிடம் தென்மராட்சி மாணவன் ஒருவன் மேற்கண்டவாறு உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நல்லை ஆதீனத்தில் இடம் பெற்ற மேற்படி சந்திப்பில் அவன் மேலும் எங்கள் கல்வியை இடையூறின்றி தொடர வழிவகை செய்யப் பட வேண்டும். இந்த அழகிய தீவில் யாவரும் சமமாக வாழவேண்டும் என்பதே எமது பேரவா என்றும் எடுத்துக்கூறியுள்ளான்.

இவ்விடயத்தை கவனமாக செவிமடுத்த சமாதானப் பேரவையினர் இங்குள்ள யதார்த்த நிலைமை மக்கள் எதிர்நோக்கும் அவலங்கள் போன்றவற்றை உரியமுறையில் தெரிவிப்போம் என தெரிவித்தனர். (க)

# வீதி திருத்தம் இல்லை

[யாழ்ப்பாணம்]

உடுவில் மேற்கு மானிப்பாய் வீதியில் பழைய மருந்தகத்திற்கு அருகிலுள்ள டச்சு றோட்டை இணைக்கும் வீதி கடந்த பல வருடங்களாக திருத்தப்படாமல் காணப்படுகின்றது.

இதனால் இப்பகுதி ஊடாக செல்வோர் பெருஞ் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

மேலும் இவ் வீதிக்கு அருகில் இடம்பெயர்ந்தோர் நலன் புரிமுகாம்கள் இரண்டு காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (க-104)

# இராசி பலன்

23-4-2001

(சித்திரை 10, திங்கள்)

அமாவாசைமு.இ 9.40 வரை
அச்சுவினி பி.இ 4.17 வரை
இராகுகாலம் 7.30- 9 00
நல்லநேரம் 12 00- 1.30
அமாவாசை விரதம்.

**மேடம்**

கற்பனை அதிகம், போசன சுகம், முயற்சி கைகூடும். சோகம்.

**இடபம்**

காரிய அலைச்சல், சுப செலவு, உணர்ச்சிவசப்படல், சயன சுகக் குறைவு.

**மிதுனம்**

முயற்சிகைகூடும், பொருள் சேர்க்கை, புகழடைதல், பெரியோர் ஆதரவு;

**கடகம்**

தொழில்சிறப்பு, மேன்மை, முயற்சி கைகூடும், பெரியோர் சந்திப்பு.

**சிங்கம்**

பிரயாணம், தந்தை வழி உறவு, புதிய திட்டம், மனப் பதட்டம்.

**கன்னி**

வீண் தொல்லை, எதிர்பாராத பிரச்சினை, நல்லஉணவு கிடைக்கும், அமைதிக் குறைவு.

**துலாம்**

வாகன வசதி, அபூர்வ சந்திப்பு, களஸ்திர சுகம், காரியம் கைகூடும்.

**விருச்சிகம்**

தனவரவு, நோய் குணமடைதல், திடீர் பயணம், முயற்சி நன்மை;

**தனுசு**

விரும்பிய இடம் செல்வதில் தடங்கல், தாழ்வு நிலை, வியாபாரச்சிறப்பு, மனக் கவலை.

**மகரம்**

தன்னம்பிக்கைக் குறைவு. மனப்பதட்டம், முயற்சி தாமதம், கெட்டவர் உறவு.

**கும்பம்**

முயற்சி வெற்றி, இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு. தனவரவு.

**மீனம்**

கௌரவக்குறைவு, மாதர் நட்பு. பொருள் விரயம், வீண் வாக்குவாதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

# நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்க!

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள அரசாங்க தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில், தகுதிகாண் ஆங்கில ஆசிரியர்களாக இம் மாதம் 25 ஆம் திகதி முதல் செயற்படும்படியாக பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜெரின் மோகனா இராஜசிங்கம் 9, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். ஜோசப் பிரதீபா காயத்திரி 111, சப்பல் தெரு, யாழ்ப்பாணம் சத்தியப்பிரியா சத்தியமூர்த்தி 94, பருத்தித்துறை வீதி, திருநெல்வேலி கிழக்கு.

ஆகிய மூவரையும் தமது நியமனக் கடிதங்களை யாழ் வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ 10)

## தீவுப் பகுதிக்குச் சுற்றுலா செல்ல
# பாடசாலை மாணவருக்கு அனுமதி மறுப்பு
## சம்பந்தப்பட்டோர் விசனம்

(ஏழாலை)

தீவுப் பகுதிக்குச் சுற்றுலா மேற்கொள்ள விருந்த பாடசாலை மாணவர்களுக்கு இறுதி நேரத்தில் இராணுவத்தினர் அனுமதி மறுக்கபபட்டதினால் அவர்கள் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

யாழ்.மல்லாகம் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமே இந்த நிலைமை ஏற்பட்டது.

இது குறித்து சம்பந்தப்பட்ட பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் அதிருப்தி நிலையடைந்துள்ளதாகவும் அறியப்படுகிறது (க-12)

# சமாதானம் வேண்டி மாபெரும் பேரணி
## கல்முனையில் சனியன்று

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தை வேண்டிக் கல்முனைப்பகுதியில் மட்டக்களப்புமெதடிஸ்த சபையினரின் ஏற்பாட்டில் மாபெருய் பேரணி ஒன்று சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

மூவாயிரத்திற்கும் அதிகமானோர் பங்கு பற்றிய இப் பேரணியில் பங்கு கொள்ள மூன்று தினங்களுக்கு முன்பே தென்பகுதியில் இருந்து வந்த இரண்டாயிரம் சபை உறுப்பினர்கள் பாசறை அமைத்து தங்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

கல்முனை மெதடிஸ்த சபையின் முகாமைத்துவ இணைப்பாளர்எஸ் பி ஜெயசீலன் தலைமையில் இப் பேரணி நடை பெற்றது

சமாதானத்தை வேண்டி இப்பகுதியில் இடம் பெற்ற முதல் பேரணி இதுவாகும். [உ-7]

# பொருட்கள்விநியோகத்தில் பெரும் ஓரவஞ்சனை

(மந்திகை)

வடமராட்சி தெற்கு. மேற்கு பிரதேச செயலர் பிரிவில் செங்குந்தார் வீதியில் அமைந்துள்ளஇடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களில் பெரும் ஓரவஞ்சனை காட்டப்பட்டுள்ளதாக முகாம் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் முகாமுக்குச் சென்ற நிறுவனம்ஒன்றினால் குடும்பங்களுக்கு தலா இரண்டு சவர்க்காரமும், சிறுவர்கள் உள்ள குடும்பத்திற்கு பேசின், நுளம்புவலை மற்றும் சில பொருட்களும் வழங்கப் பட்டது.

இவ்வாறான பொருட்கள் சிலருக்கு வழங்கப்படவில்லை என தெரிவிக்கப் பட்டுள்ளது.

முகாமில் அமைக்கப்பட்ட குடிசைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-23)

## தேர்தல் வேட்புமனுவின் இறுதி முடிவு தேர்தல் அதிகாரியிடம்

# ஜெயலலிதாவின் கதி என்ன?

(சென்னை)

மாவட்டத் தேர்தல் அதிகாரிகளே தேர்தல் வேட்புமனுக்களை ஆராய்ந்து நிராகரிக்க வேண்டும் என்று தமிழகத் தேர்தல் ஆணையர் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

தேர்தல் வேட்புமனு சம்பந்தப்பட்ட எந்த முடிவையும் தேர்தல் அதிகாரிகளே எடுக்கவேண்டுமென்றும் தனக்கு எந்த விதத்திலும் மேன்முறையீடு செய்யவேண்டாமென்றும் அதிகாரிகளை முடிவுகளை எடுக்குமாறும் மேலும் அறிவித்துள்ளார்.

இதேவேளை, ஜெயலலிதா போன்றோரின் வேட்புமனுக்களும் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளினால் பரிசீலிக்கப்பட்டே ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது நிராகரிக்கப்படும்.

எனவே ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட உத்தரவு போடும்படி மேல் நீதிமன்றத்திற்கு மனுத்தாக்கல் செய்திருந்த போதிலும் சாதகமான தீர்வு கிடைக்கப் போவதில்லை எனவும் ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குரியதாகலாம்எனவும்அரசியல் நோக்குநர் கருத்து வெளியிட்டுள்ளனர். (து)

## உலகின் மிகப்பெரும்முத்து பர்மாவின் சொத்து

(லண்டன்)

உலகிலேயே மிகப் பெரியது எனக் கருதப்படும் முத்து ஒன்றை கண்டுபிடித்திருப்பதாக பர்மா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பர்மாவின் தென்கரைக்கு அப்பால் சிப்பிகள் இருக்கும் கடல் அடியில் இது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து103கிராம் நிறையும் 6.2 சென்ரி மீற்றம உயரமும் கொண்டதாக இம்முத்து அமைந்துள்ளது.

இதுவரை உலகிலேயே மிகப் பெரிய முத்து எனக் கருதப்பட்டுவந்த 19ம் நூற்றாண்டின் முதல் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட முத்தை விட இப்போது கண்டு பிடிக்கப்பட்டது இரண்டு மடங்கு பெரியதாகும். (உ)

## ஆசிய - பசுபிக் மனித உரிமைகள்சாசனம் உருவாக்கப்பட வேண்டும்

### ரணில் நோர்வேயில் தெரிவிப்பு

(லண்டன்)

ஆசிய பசபிக் மனித உரிமைகள சாசனம் ஒன்று விரைவில் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க நோர்வே அரசாங்கத்திடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

நோர்வே நாட்டிற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட எதிர்க் கட்சித் தலைவர் அந்நாட்டு அரசப் பிரதிநிதிகள் மற்றும் முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்திய அவர் ஆசிய, பசுபிக் நாடுகளில் அரசியல் உரிமைகள் பற்றி குரல் எழுப்பும் அரசியல் கட்சிகள் இது போன்ற மனித உரிமைகள் விடயத்திலும் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம் எனத்தெரிவித்தார்.

ஒரு நாட்டில் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் சாசனம் அமைக்கப்பட்டதுடன் அதனை நடைமுறைப்படுத்துவதற்காக விசேட அதிகாரங்கள் கொண்ட ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டுமெ என்றும் தெரிவித்தார். (க)


உலக தரிசனம் அறிவுப் போட்டி 9 இல் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில் உதவுபவர்கள்
மிக்ஷர், பகோடா, மஸ்கற் மற்றும் சுவைப் பண்டங்கள் தயாரிப்பாளர்களான
**சாரியாத் மிக்ஷர்**
279 பலாலி வீதி, திருநெல்வேலி.


**உலக தரிசன அறிவு போட்டி இல - 9**

முழுப்பெயர்: ____________________

முகவரி: ____________________

____________________

பிறந்த திகதி: ____________________

போட்டியாளர் கையொப்பம்: ____________________

பெற்ற புள்ளிகள்: __________

25-4-2001க்கு முன் உலகதரிசன விடைகளை பத்திரத்துடன் அனுப்பி வைக்கவும்.

## கியூபாவில் நாற்பதாண்டு கம்யூனிஸம்

(ஹவானா)

கியூபா கம்யூனிஸ நாடாகப் பிரகடனப படுத்திய நாற்பதாவது ஆண்டுவிழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

ஹவானாவில் பல இலட்சக்கணக்கான மக்கள் கலந்து சிறப்பித்த இந்த விழாவில் நாட்டின் அதிபர் பிடல் கஸ்ரோ உரைநிகழ்த்தினார்.

ஹவானாவில் எந்த இடத்தில் கம்யூனிஸ நாட்டுப்பிரகடனம் எடுக்கப்பட்டதோ அதே இடத்தில் இவ்விழா கொண்டாடப்பட்டது. (து)

## இந்தியா மீது பங்களாதேஷ் தாக்கியது துரதிஷ்டமானது

(டாக்கா)

பங்களாதேஷ் எல்லைப் படையினர் இந்தியப் படையினரைக் கொன்றது துரதிஷ்டவசமான செயலென்றும் இது போல் இனிமேல் நடக்காது பார்த்துக் கொள்ளப்படும் என்றும் பங்களாதேஷ் வெளியுறவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எல்லைப் புறத்தில் இப்படியான செயல்கள் இடம் பெற்றது பற்றி பூரண விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளாதாக அவர்மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வாஜ்பாய் பலத்த கண்டனத்தை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (து-7)

## புல்லை!உண்ணும் ஆப்கான் அகதிகள்

[ஆப்கானிஸ்தான்]

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள உணவுத்தட்டுப்பாடு காரணமாகஅங்கு வாழும் மக்கள் புல்லை உணவாக உட்கொள்கிறார்கள் எனத்தெரிய வந்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் வடகிழக்குப் பிரதேசத்தில் தலிபான் அமைப்பினருக்கும் அவர்களுக்குஎதிரான போராளிக் குழுக்களுக்குமிடையில் ஏற்பட்டுவரும் மோதல்களில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தத்தம் இடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர்.

எட்டு ஆயிரம் மக்கள் அப்பகுதியில் கூடாரம் அமைத்து தங்கி வருகின்றனர்.

இவர்களே உண்ண உணவு இன்றி பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ள நிலையில் புல்லை உண்கின்றனர் என்று அங்கு பணிபுரியும் தொண்டர் நிறுவனமொன்று தெரிவித்துள்ளது. [உ-3]

## விண்வெளி ஆய்வாளர்கள் தங்க விடுதி அமைப்பு

(வாஷிங்டன்)

சர்வதேச விண்வெளி நிலையத்தில் விண்வெளி ஆய்வாளர்கள் தங்கும் விடுதி அமைக்கும் விடயத்தில் நாசா விண்வெளி நிலையமும் இத்தாலிய விண்வெளி நிலையமும் ஒருமைப் பாட்டுக்கு வந்துள்ளன.

இருநாட்டு விண்வெளி நிலையங்களுக்கிடையேயான இந்த உடன்பாட்டின் பிரகாரம் அடுத்த ஆண்டு விடுதி அமைக்கும்பணி தொடங்கலாமென்றும், இத்தாலிய அரசு விடுதி அமைப்புக்குரிய பொருட்களை கொடுத்துதவ இருப்பதாகவும்இத்தாலிய வெளிவிவகாரஅமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த விடுதியில், இருநாட்டு விஞ்ஞானிகளும் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொள்ள முடியுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. [து]

## அழகிரி, ஜெயலலிதா தொலைபேசி உரையாடல்

(புதுடில்லி)

தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக மதுரை சென்ற ஜெயலலிதாவுடன் முதல்வர் கருணாநிதியின் மகன் இரகசியமாக தொலைபேசியில் உரையாடியுள்ளதாக அறிய முடிகிறது.

கடந்த 18 ஆந்திகதி மதுரை விடுதி ஒன்றில் தங்கியிருந்த ஜெயலலிதாவுடன் முதல்வரின் மகன் அழகிரி, முத்துகுமாரசாமியும் தொடர்பு கொண்டுள்ளார்கள் என்று, சபாநாயகர் வீட்டிலிருந்தும் மத்திய பொலிஸ் நிலையத்திலிருந்தும் பரபரப்பான செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனாலும் இச் செய்திகள் குறித்து இவ்விருவரும் மறுப்பு தெரிவித்துள்ளனர். (உ-7)

## சீனாவில் சுரங்க விபத்து 47 தொழிலாளர் பலி

(பீக்கிங்)

சீனாவின் வடபகுதியில் ஏற்பட்ட சுரங்க விபத்தில் 47 சுரங்கத் தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர்.

சென்ற வருடங்களில் நிகழ்ந்த சுரங்க விபத்துக்களை அடுத்து மூடப்பட்டிருந்தசுரங்கப்பகுதிக்குள்சட்டவிரோதமாக நுழைந்தபோது வாயுக் கசிவினால் சுரங்கம் இடிந்து வீழ்ந்ததனால் இவ் விபத்து நேர்ந்துள்ளது. (உ-7)

## எகிப்திய விமானம் விபத்துக்குள்ளான காரணம் கண்டறியப்படவில்லை

(ஹெய்ரோ)

அண்மையில் எகிப்திய விமானம் விபத்துக்குள்ளானதற்கு விமானி எந்த விதத்திலும் பொறுப்பாளி இல்லை என எகிப்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

990 எனும் இவ் விமானம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 215 பேரும் பலியாகியுள்ளமை தெரிந்ததே.

இதேவேளை, குறித்த விமானம் விபத்துக்குள்ளானமைக்கு இயந்திர கோளாறு காரணமில்லை, இணைவிமானியே காரணம் என்று அமெரிக்க ஆய்வாளர்கள் முன்பு கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## அணுவாயுத உடன் பாட்டில் இந்தியா பாக். கைச் சாத்து

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் இந்தியாவுடன் பிராந்திய நிலையில் அணுவாயுதத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இருப்பதாகஅதிபர் முஷாரப் தெரிவித்தார்.

இருநாடுகளும் அணுவாயுதத்தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதால் ஆசியப்பிராந்தியத்தில் பாதுகாப்பு ஸ்திரத்தன்மையும் வலுவடையுமென்றும் நாடுகளிடையே நட்புறவையும் வளர்க்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

இதேவேளை சிரி.பிரி தொடர்பாக மக்கள் அபிப்பிராயத்தை திரட்ட வேண்டுமென்றும் முஷாரப் தெரிவித்துள்ளார். (து)

## இந்திய நோர்வே மக்களின் உறவுகள் பலமடைகின்றன

[புதுடில்லி]

இந்திய நோர்வே மக்களுக்கிடையில் மேலும் உறவுகளைப் பலப்படுத்துவதற்கு திரைப்பட விழாக்கள் முக்கிய இடம் வகிக்கின்றன என்று நோர்வேப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நோர்வே நாட்டுத் திரைப்பட விழாவைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் நோர்வே பிரதமர் ஜெனட்ஸ்ரேட்ஸ்டன்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவுக்கு ஐந்து நாள் விஜயத்தைமேற்கொண்டிருக்கிரும் பிரதமர் மேலும் தெரிவிக்கையில், நோர்வேயில் இந்தியத் திரைப்பட விழாக்கள் அடிக்கடி நடைபெறுவதாகவும் குறிப்பிட்டார். [து]

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி

குறள்

# வலம்புரி

## யதார்த்த வெளிப்பாடு

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த தேசிய சமாதானப்பேரவையினர் பல்வேறு இடங்களுக்குச் சென்று நேரடியாகத் தகவல்களைப் பெற்றுக் கொண்டனர். பெறப்பட்ட தரவுகள் எந்தளவு தூரம் அவர்களின் கவனத்தை ஈர்ந்திருக்குமென்பது கேள்விக்குறியே.

ஏனெனில் ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கிரகிக்கக் கூடியஅளவு வரையறுக்கப்பட்டதே. ஆனால் தேசிய சமாதானப் பேரவையினரோ தம்மால் கிரகிக்கக் கூடிய அளவுக்கு அப்பாலும் குறைகுற்றம் வரலாகாது என்ற கோதாவில் எல்லா இடங்களுக்கும் நேரடியாகச் சென்றுள்ளனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஒவ்வொருவரும் தத்தம் நிலைகளில் நின்று குறைகுற்றங்களை எடுத்துக் கூறினரோயொழிய, ஒட்டு மொத்தத்தில் நாம் அனுபவிக்கும் பிரச்சினைகளை அதற்குக்காரணமாக உள்ள இனவாதத்தைப்பற்றி பெரியளவில் எடுத்துக் கூறியதாக தெரியவில்லை.

எனினும் இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் துறைசார்ந்த மாணவர்கள் நாம் அனுபவிக்கும் யதார்த்தமான பிரச்சினைகளை வெளிக்காட்ட அறிக்கைகளையோ, மகஜர்களையோ கையாளாமல் புதிய பாணியில் நாடகமாகவே நடித்துக் காட்டியுள்ளனர்.

கேட்டால் மறப்பேன், பார்த்தால் ஞாபகமிருக்குமென்ற சீனப்பழமொழிக்கமைய, தேசிய சமாதானப்பேரவையினர்எதனை மறந்தாலும் நிச்சயமாக யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் நாடக ஆற்றுகையை மறக்கமாட்டார்கள் என்பதுஉண்மை

வாருங்கள், பாருங்கள் நம்மக்கள் படுகின்ற துன்ப துயரங்களை, நாளாந்தம் வீதிகளில் நடக்கும் உபத்திரங்களை என்பது போல் அமைந்த நாடக ஆற்றுகை, உண்மையிலேயே யதார்த்தத்தின் வெளிப்பாடாகும்.

அதேவேளை பல்கலைக்கழக மாணவர்களின் சிந்தனை - அறிவோட்டம், வித்தியா சமானதாக இருக்க வேண்டுமென்ற சமூகஎதிர்பார்ப்பனவுக்கு அமைவாக தமது ஆற்றலை யாழ் பல்கலைக்கழக மாணவர்களும், விரிவுரையாளர்களும், வெளிப்படுத்தியுள்ளனர்.

---

# விரிசிந்தனையை உருவாக்குவதன் மூலம்தான் விளக்கக் குறைவை நிவர்த்திசெய்ய முடியும்

**மூலக்கருத்து: சுமணசிரிலியனகே**
**தமிழ் வடிவம் முனி**

இரண்டு விசைகள் வெவ்வேறு திசைகளில் இழுத்தால் அவற்றின் விளையுள் (அதாவது பெறுபேறு) இரண்டிற்கும் இடைப்பட்ட வேறொரு திசையில் இழுக்கும். இது இணைகர விதி. பள்ளிப் பிள்ளைகளுக்கும் தெரிந்த பிரயோக கணிதம். இதனை மனத்தில் இருத்திக் கொண்டு பிணக்குகளைக் கையாள்வது பற்றி, இன்றைய அரசின் விளக்கக் குறைவை எடுத்து நோக்குவோம்.

'விட்டால் குடுமி: வழித்தால் மொட்டை' என்ற போக்கிலே ஒற்றை றோட்டு முறைப்படி பூசல்களை அணுகுவது புத்தியாகாது. 'ஓம் அல்லது இல்லை' என்னும் இருமுனை நோக்கு நல்ல பயனைத் தரத் தவறிவிடக்கூடும்: புலிகளின் போர் நிறுத்த நல்லெண்ணத்தை ஒன்றில் முழுமையாக ஏற்க வேண்டும் அல்லது கண்களை மூடிக் கொண்டு சுழற்றி எறிந்து விட வேண்டும். என்ற தவறான அணுகுமுறையை அரசு கடைப்பிடிப்பதாகத் தோன்றுகிறது.

### முட்டுக்கட்டைகள்

அரசறிவியல் தெரிந்தவர்கள் சுட்டிக் காட்டும் சில உண்மைகள் இங்கு கவனிக்கத்தக்கன. பெரும்பாலான கருத்திணக்க முயற்சிகளில், நான்கு வகையான முட்டுக் கட்டைகள் தோன்றுவதுண்டு: (1) அவசர முன் முடிவுகள், (2) ஒற்றைத் தீர்வொன்றினைத் தேட நினைத்தல், (3) விட்டுக் கொடுக்காத இறுகிய பிடிவாதம், (4) ''எங்கள் பிரச்சினை இது இதை நாங்களோ தீர்ப்போம்'' என்ற கடும்பிடி

ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோரின் கூற்றுகளில் முதல் மூன்று தடைகளும் பதுங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். பல்வேறு மாற்று வழிகளை யோசித்துப் பார்க்கும் திறமை இலேசாகக் கைகூடி வரும் ஒன்றல்ல. அப்படி யோசிக்க வேண்டுமானால் பல்வேறு சாத்தியப் பாடுகளையும் அவற்றுக்கு இடங் கொடுக்கும் சூழல்களையும் கண்டறியும் கற்பனைத்திறன் வேண்டும். இதற்கு விரிசிந்தனை அவசியம். அப்படிப்பட்ட விரிந்த சிந்தனையின் விளைவாகத்தான், கைவசமுள்ள பிரச்சினையைத் தொடர்ந்து மதிப்பீடு செய்து அதனைப் படிப்படியாக மறுவரைவு செய்து கொள்ளலாம். அதுதான் பொருத்தமான இணக்கப்பாடுகளுக்கு அருகில் நம்மை இட்டுச் செல்லும். முன்கூட்டியே ஒரு முடிவைத் தீர்மானித்து வைத்துக் கொண்டு, அதனையே சிக்கெனப் பிடித்துக் கொண்டிருந்தால் இணக்கத் தீர்வானது எட்டாத அடிவானம் போல விலகி விலகித்தான் போய்க் கொண்டிருக்கும். ஏற்கனவே புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நடைபெற்ற இணக்க முயற்சிகளிலே இந்தப் பலவீனம் இடம்பெற்றிருந்தமைக்குவரலாறு சான்று பகரும்.

### பலமுனை அணுகுமுறை

புலிகளின் சமாதான முன்னெடுப்புக்கு, போர் நிறுத்த அறிவிப்புக்கு இருமுனை அணுகுமுறையை நெகிழவிட்டு பலமுனை அணுகலை அரசு கைக்கொண்டிருந்தால், முகத்தில் அடித்தது போல அந்த அறிவிப்பைத் தூக்கி எறியாது தவிர்த்திருக்கலாம். முன்வைக்கப்பட்ட யோசனைக்குச் சில திருத்தங்களைச் செய்து மாற்று யோசனைகளைத் தெரிவித்திருக்கலாம்.

அடுத்ததாக புலி இயக்கத் தலைவரின் ஆளுமை பற்றிய மனப்படம், அரசு தரப்பினைப் பெரிதும் குழப்பி விட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது. தலைவர் ஒரு நேர்மையற்ற நம்பத்தகாத தந்திரசாலி இறுகிய உள்ளம் படைத்த பயங்கர மாயபூதம் என்று அரசு தரப்பினர் எண்ணியிருக்கலாம். அந்த எண்ணம் சரியா பிழையா என்பது வேறு விடயம். ஆனால் ஆள் நிலைப்பட்ட அந்த மதிப்பீட்டையும் அரசியலையும் போட்டுக் குழப்பியதாலே தான் அமைதி முயற்சி தடங்கலடைய நேரிட்டது. ஆள் நிலைப்பட்ட உளவியற் பரிமாணம் முக்கியமானதல்ல என்ற முடிவுக்கு நாம் வரத் தேவையில்லை எதிர்த் தரப்புப்பற்றி ஒருவர் கொள்ளும் அபிப்பிராயம் இணக்க முயற்சிகளை அப்படியே கவிழ்த்துக் கொட்டி விடும் கட்டத்துக்கு அவரைத் தள்ளிவிடுமேயானால் அது பெருந்தவறும் அவலமும் ஆகும்.

### சாதிக்க முடியும்

இணக்கப்பாட்டு முறைமியல் ஒரு விஞ்ஞான நெறியாக வளர்ந்துள்ளது அத்துடன் அது ஒரு கலையும்கூட. வெறும் சமாதான விருப்பம் மட்டுமே போதியதல்ல. வழமையான பேரம் பேசும் பாணிகளை விட்டு விலகி, விரிசிந்தனை நோக்கில அரசு தரப்பும் நகருதல வேண்டும். எதிரும் புதிருமாக நிற்கும் இருசாராரும் சாதிக்க முடியாத காரியத்தை ஒருவேளை நோயவேயின் நடுநிலை ஏற்பாட்டாளரின்உதவி சாதித்து விடக்கூடும்.

---

# நவீன நாவலர் இலக்கியத்தின் முன்னோடி

# மறைந்த எழுத்தாளர் வ. அ. இராசரத்தினம்

## நினைவஞ்சலியில் செங்கைஆழியான் தெரிவிப்பு

(அரியாலை)

'நவீன நாவல் இலக்கியத்தின் முன்னோடியாக திகழ்பவர் மறைந்த எழுத்தாளர் வ.அ இராசரத்தினம் 'கொழுகொம்பு' அவரின்முதல் நாவல் இனப்பிரச்சினையை மையமாக வைத்தும் அவர்இரண்டு நாவல்களை எழுதியுள்ளார். 'வெண்மணல் காத்திருக்கிறது' என்ற அவரின் நாவல் தமிழ்த் தேசிய வாதத்தின் பிரதிபலிப்பாகவெளிவந்தது. புனைகதை வரலாற்றில் முற்போக்கு கால கட்டத்தில் வாழ்ந்த அவரின்இழப்புதமிழ் இலக்கிய உலகிற்கு பேரிழப்பு என்று கூறினாலும் கூட அவர் தன் காலத்தில் தனது எழுத்துத்துறையில் முழுமைபெற்றுவிட்ட ஒருவராகி விட்டார்'

மறைந்தஎழுத்தாளர்வ.அ. இராசரத்தினத்தின் நினைவஞ்சலிக் கூட்டம்ஆரியகுளத்திலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியமண்டபத்தில்க. தணிகாசலம் தலைமையில் நேற்று நடைபெற்ற போது உரையாற்றிய கலாநிதி க. குணராசா [செங்கையாழியான்] இவ்வாறுதெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்-

1925 ஆம் ஆண்டு மூதூர் கிராமத்தில் பிறந்த வ.அ. இராசரத்தினம் 1940 இல் எழுத்துலகில்பிரவேசித்தார். தனது மண்ணை சிரஞ்சீவித் தன்மை வாய்ந்த நிலையில் எழுத்துலகிற்குக் காட்ட முற்பட்டது தான் அவரின் பேனாவின் குறிக்கோளாக இருந்தது.

1958 இல் வெளியான 'தோணி' சிறுகதை பிரபலமானது 'ஒரு காவியம்நிறைவு பெறுகிறது' என்றசிறுகதைத் தொகுப்பும் 'கொட்டியாரக் கதைகள் என்ற நூலும் அண்மையில் வெளிவந்துள்ளன.

புனைகதை இலக்கியத்தின் முக்கியமான படிக்கல்லாக விளங்கிய அவர் இலக்கிய நேர்மை மிக்கவராகவும் ஆங்கிலப்புலமை யுள்ளவராகவும் திகழ்ந்தார். ஈழத்தில் இலங்கையர் கோனுடன் அவருக்கு நல்ல உறவு இருநதது.

செம்பியன்செல்வன், என்ற மூதறிஞர் சொக்கன், புத்தொளி, பேராசிரியர் நந்தி, அராலியூர்ந சுந்தரம்பிள்ளை உடுவில் அரவிந்தன் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (க-106,

---

### மணியான காமாட்சியே

வண்ணைக் குளக்கரை நாயகியே
வந்திப்பார் உள்ளத்தில் உறைபவளே
கண்ணின் மணியான காமாட்சியே
காணக் கொடியேறி அருள்வாயே

வேலணை பாலா
அங்-47

வண்ணை காமாட்சி அம்பாள் கொடியேற்றத்தை ஒட்டி இக்கவிதை பிரசுரமாகிறது)

---

# வடமராட்சியிலும் மேதின ஏற்பாடுகள்

(தென்மராட்சி)

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் பணிபுரியும் கூட்டுறவு ஊழியர்கள் யாவரும் இணைந்து இவ்வருடமே,தினத்தினை வடமராட்சியில கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

இக் கூட்டத்திற்கான நிதியுதவியை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கவுள்ளன (உ-77,

---

# துப்பாக்கி முனையில் பணம் பறிக்கப்பட்டது

## ஊரடங்கு வேளையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கி முனையில் பேக்கரி உரிமையாளரை மிரட்டி பணம் பறிக்கப்பட்ட சம்பவம் பண்டத்தரிப்பு பகுதியில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் அறியப்படுவதாவது,

இரவு வேளை துப்பாக்கியுடன் சிவில் உடையில் வீட்டினுள் நுழைந்த இளைஞர்கள் இருவர் குடும்ப அங்கத்தவரை வெளியே செல்லும் படி கூறிவிட்டு 50 ஆயிரம் ரூபா தரும் படி கேட்டு பேக்ரி உரிமையாளரை மிரட்டியுள்ளனர்.

அவர் பணம் இல்லை எனக் கூறவே மேசைலாச்சியைத் திறந்தவர்கள் அதனுள்ளிருந்த 900ரூபாவை எடுதது்க் கொண்டு சென்று விட்டார்கள்.

ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் இடம் பெற்ற இச் சம்பவம் குறித்து அப் பகுதி மக்கள் பதற்றமும், பீதியும் அடைந்துள்ளனர்.

[உ-104]

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
**நியூ**
**ராதிகாஸ்**
**நகை மாளிகை**
**189. கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**
(கி/ 1770)

# இலவசப்பாடநூல்விநியோகம்

# மே.மா.கல்விப்பணிப்பாளர்விளக்கம்

(யாழ்ப்பாணம்)

புதிய பாடத்திட்டத்துக் கமைய யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப் பட்ட பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப் படாததை சுட்டிக்காட்டி வடமாகாண அதிபர் சங்கத் தலைவர் க. இராசதுரை தெரிவித்த கருத்து குறித்து மேலதிக மாகணக் கல்விப் பணிப்பாளர் எஸ் என். தணிகாசலம் பிள்ளை நேற்று அறிக்கை யொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ்ப்பாண மாணவர்களுக்குஇலவசபாட நூல் வழங்படாது ''பாதுகாப்பாக'' வைக்கப்பட்டிருப்பதாகயாழ் மத்தியகல்லூரிஅதிபர் நேற்று முன்தினம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை தவறானது;

இவ்வாண்டுக்குரிய முதற் தொகுதி பாட நூல்கள் 204899 14. 12. 2000 இல் கிடைத்தன. இரண்டாவது தொகுதியில்273059 நூல்கள் 6.02.2001இல்கிடைத்தன' தவறுதலாக அனுப்பப்பட்ட சிங்கள, இஸ்லாம்சமய நூல்கள் 22075 தவிர 455883 நூல்கள் ஐந்து கல்வி வலயங்களுக்கு விநியோகிக்கப் பட்டு விட்டன;

மூன்றாவது கட்டத்தில் 479பொதிகள் 11. 04. 2001 இல் கிடைத்தன மிகுதி1271 பொதிகள் கடந்த வெள்ளிக் கிழமைவரை கப்பலில்இருந்து இறக்கப்படவில்லை என்பதை சிவில் இணைப்பு அதிகாரி உறுதிசெய்துள்ளார். நானும் அவரும் இது குறித்து கடற் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபடியே இருந்தோம்.

நூல்கள் விநியோகிக்கப் படாது பூட்டி வைக்கப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்ட அறிக்கை அச்சேறிக் கொண்டிருந்த 21. 04. 2001 சனிக் கிழமைமாலை 6 30மணிக்கே 1271 பொதிகள்லொறிமூலம் கோப்பாய்க்கு எடுத்து வரப் பட்டன.

மூன்றாம் கட்டத்துக்குரிய முழுப் பொதிகளும் வந்து சேரும்முன்பே விநியோகம் தொடங்கியிருக்க வேண்டும் என்று திரு. இராசதுரை எதிர்பார்க்கிறாரா?

யாழ் மாவட்டத்தில் தான் நூல் விநியோகம் செய்துமுடியவில்லை என்றுநிலைநாட்ட முனையும் சக்திகளுக்குத் துணை போகிறவர்கள், போக்கு வரத்துப் பிரச்சினை இல்லாத தென் மாகாணத்துக்கும்,மலைநாட்டுக்கும்கூட நூல் விநியோகம்செய்யமுடியவில்லை என்பதை உணர்வதுடன் யாழ்மாவட்டத்துக்கான இணைப்புப் பணிமனைக்கு தொலைபேசி, தொலைநகல் முதலியஅடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலும் எமது பிள்ளைகளுக்கு நூல் வழங்குவதில் நாம்படும் சிரமங்களையும் உணர்ந்து கொள்வது நல்லது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது; (இ-10)

## இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

இளைஞர்களை இராணுவத்தின் மருத்துவ உதவியாளர்களாகஆட்சேர்க்கும் பணி இன்று முதல்ஆரம்பமாகிறது;

கண்டி'காலி,அனுராதபுரம், கொழும்பு ஆகியஇடங்களிலுள்ள இராணுவ முகாம்களில இதற்கான நேர் முகப் பரீட்சை இடம் பெறும்.(ந)

**சமாதான...**

விருப்பத்தையும் காட்டுகிறதென்றும் சர்வதேச அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ]இ-05

**தலைமைப். .**

போவதில்லை என்று கரு ஜெயசூரியா நேற்றுத்தெரிவித்துள்ளார்;

இது தொடர்பாக கரு ஜெயசூரிய மேலும் தெரிவிக்கையில், தற்போது பேசப் பட்டுவரும் ஐக்கிய தேசியக் கட்சித்தலைமைப்பதவி தொடர்பாக எதுவும் நடைபெற மாட்டாது. ரணில் விக்கிரம சிங்காவை தலைமைப்பதவியில் இருந்து அகற்றுவதற்கு நான் ஒரு போதும் உடந்தையாக இருக்கமாட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

(வ

## ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

நேற்று முன்தினம் தாளையடிப் பகுதியில் படையினர் மேற்கொண்ட வலிந்த தாக்குதலின் போது சிறப்பு எல்லைப்படை வீரரான ★லெப்.வண்ணன் (ஆறுமுகம் தயாநேசன், யாழ் மாவட்டம்) என்ற போராளி தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

**வன்னிப்**

தொடர்பாகஎழுதியகட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அக்கட்டுரையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

எனக்கேற்பட்ட சூட்டுச் சம்பவத்தினால் எனது இடது கண் பார்வைக்குத் திரும்பும் என்று நான் நம்பவில்லை; இருந்தாலும் எனது பணியை நான் தொடர்ந்து செய்வேன்

வன்னிக் கிராமங்கள் ஊடாக பயணம் செய்து, வெளியுலகிற்குத் தெரியாத மானிடத் துயர் நிறைந்த நெருக்கடியைக் கண்டேன். தொண்டர் நிறுவனங்கள் உணவு வழங்குவதை நிறுத்தியிருந்தார்கள். மின்சாரம் இல்லை. பாவனைக்கு என பொருள் இல்லை நீரிறைக்கும் இயந்திரம் இல்லை;

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை விட்டு நீங்கி இராணுவக்கட்டுப்பாட்டுபகுதிக்கு வருவதற்கு மூன்று தினங்கள் பாடுபட்டேன். இதன்போது இரவில் சதுப்பு நிலத்திலும் சேற்றிலும் நெல்வயல்களிலும், முழங்கால்அளவு நீரில் 30மைல் தூரம் நீளம் நடந்துள்ளேன்;

இராணுவ எல்லைக்கோட்டைக் கடப்பதில் இருந்த ஆபத்துக்களை எனக்கு வழி காட்டியவர்கள் நன்குணர்ந்துள்ளனர். வழி காட்டியசிவிலியன்கள் மிகவும் அவதானமாக என்னை வழி நடத்தினர்;

விடுதலைப்புலிகள் தமிழர்களைப் பயமுறுத்தி கட்டுப் படுத்தி வைத்திருப்பதாக அரசு குற்றம் சாட்டுகிறது. ஆனால் விடுதலைப் புலிகள் அங்குள்ள மக்களின் பேராதரவைப் பெற்றுள்ளனர் புலிகள் இல்லாவிட்டால் தமிழ் மக்கள் எப்போதே கொல்லப்பட்டிருப்பார்கள் என்று மதகுரு ஒருவர் தெரிவித்திருந்தார். தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்டெடுத்தும் அதை உத்தரவாதப் படுத்துகின்றஒருதீர்வுதான்வேண்டும் என்று தெரிவித்துள்ளார்

தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்ற
தங்க ஆபரணங்களின்
சாம்ராஜ்யம்
**மகாநதி**
**ஜுவல்லறி**
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1769)

## அடையாள அணிவகுப்பு

மன்னார் உப்புகுளப்பகுதியில் இடம் பெற்ற பாலியல் வல்லுறவு சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம் காணும் பொருட்டு இன்று மன்னார் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பொன்று நடைபெறவுள்ளது

மன்னாரில் இரு இளம்குடும்பப் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய படையினரை கைது செய்து நீதிமன்றில்ஆஜர்படுத்துமாறு நீதிஅமைசசர் பட்டி வீரக்கோனும், நீதவானும் உத்தரவிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. [வ]

**விடுதலை**

பேச்சுவார்த்தைக்கே அரசு தயாராகவுள்ளதாகவும்,முன் நிபந்தனைகளுடன் அரசு ஒருபோதும் புலிகளுடன் பேசமாட்டாதெனவும் பிரதமர் கூறியதாக சண்டே ஒப்சேவர் செய்தி வெளியிட்டுள்ளது.

**மேரி கத்தரின்**

காக நியூயோக்கிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தலைசிறந்த கண் சத்திர சிகிச்சை நிபுணர்ஸ்ராலிசங்யூ இவருக்கு சந்திர சிகிச்சை மேற்கொள்வார். (ந)

**பணியாளர்கள்**

பிரதி அமைச்சர்களின் உதவியாளர்களின்எண்ணிக்கையை 10 ஆக வரையறை செய்ததாலுமே ஆயிரம் பேர்வரை வேலையிழந்துள்ளனர்.

வேலையிழந்தவர்கள்தமக்கு மாற்று ஒழுங்கு செய்யப்பட வேண்டுமெனகேட்டுள்ளனர்; [ந]

வன்னிப்பகுதியில் உணவு இல்லை மருந்துகள் இல்லை என்றும் மேரி கத்தரின் கொல்வின் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார் (ம)

# நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி



**செல்வன் காராளபிள்ளை வினாயகசிவம்**

(கண்ணன்)

நயினாதீவு 5-ம் வட்டாரம்

தாயின்மடியில் : 01-11-1967

பாரிசிலிருந்து பரந்த விண்ணில் : 06-05-1997

காராள பிள்ளைமகன் கண்ணன் பாரிஸ்நகரில்
சீரான ஈசுருத்துச் சித்திரையில் - நேராக
அச்சுவினி சேரும் அமாவாசை (வி)நாயகர்தன்
சித்தமுறச் சென்றான் சிறப்பு;

வினாயகசிவமே உன் நினைவு விநாயகர்தான்
நாயகமாய் என்றும் நடுவிருக்கும் எம்மனதில்

உன்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

தகவல்

**விக்கினேஸ்வரா ஸ்ரோர்**

உரிமையாளர்

நயினாதீவு - 6

2931

**தொழிற் பயிற்சிகள்**

★ Radio TV and Video Deck Repairing
★ Motor Rewinding and Electrical Wiring
★ Motor Cycle Mechanism
★ Air Conditioning and Refrigeration
City and Guilds of London Exam

பயிற்சிகள் ஆரம்பம்:

27 - 04 - 2001 - (கிழமை நாள்களில்)
28 - 04 - 2001 - (சனி, ஞாயிறு தினங்களில்)

**Jaffna Technical Institute**
**52|1, Stanley Road,**
**Jaffna.**
T. P. 3335
(கி-1869)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது